செய்தி வெளியீடு எண்: 855 நாள் : 03.10.2010.

# கன் னியாகுமரி மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு 15 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம் மிடாலம் என்ற இடத்தில் 19.9.2010 அன்று நடந்த விநாயகர் சதுர்த்தி விழா மற்றும் சிலை கரைப்பு ஊர்வலத்தின்போது ஊர்வலத்தினருக்கும், உள்ளூர் மக்களுக்குமிடையே ஏற்பட்ட பிரச்சினையின் விளைவாக வீடுகள், கடைகள் மற்றும் வாகனங்கள் சேதமடைந்துள்ளதாகவும், அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தகுந்த நிவாரணம் வழங்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாகவும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையினை ஏற்று, இந்நிகழ்வினால் பாதிக்கப்பட்ட 8 வீடுகள், 3 கடைகளுடன் கூடிய வீடுகள், 21 கடைகள் மற்றும் 5 வாகனங்கள் ஆகிவற்றின் உரிமையாளர்களுக்கு மொத்தம் 15 இலட்சத்து 68 ஆயிரத்து 800 ரூபாய் நிவாரண நிதியாக வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இன்று (3.10.2010) ஆணையிட்டுள்ளார்.

* * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9